**சுருக்கம்**

தொழில் – 2015–2016–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – ஒரு பொதுத்துறை மற்றும் 7 கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகளில் சுழல் சல்லடை நிலையத்தின் திறனை மேம்படுத்தி, கழிவுப்பாகு மேலேற்று தொட்டிகளில் தானியங்கி கருவிகள் (Auto Level - Indicators) ரூ.64 இலட்சம் செலவில் நிறுவுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.சி.1) துறை**

**அரசாணை (டி) எண்.171** **நாள் : 18.09.2015**

மன்மத, புரட்டாசி –1

திருவள்ளுவர் ஆண்டு 2046

**ஆணை:**

2015–2016–ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழில் துறை மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:

> "ஒரு பொதுத்துறை மற்றும் 7 கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகளில் சுழல் சல்லடை நிலையத்தின் திறனை மேம்படுத்தி, கழிவுப்பாகு மேலேற்று தொட்டிகளில் தானியங்கி கருவிகள் (Auto Level - Indicators) ரூ.64 இலட்சம் செலவில் நிறுவப்படும்".

2. மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக பொதுத்துறை சர்க்கரை ஆலையான பெரம்பலூர் சர்க்கரை ஆலை மற்றும் ஏழு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளான (i)செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை (ii)செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை (iii)கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலை (iv)எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை (v)சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை (vi)திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் (vii)வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகளுக்கு தங்களது நிதியினைக் கொண்டு மேற்காணும் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டங்களை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்தும் மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் சர்க்கரைத் துறை இயக்குநரை அரசு பணிக்கிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச.வி. சங்கர்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
சர்க்கரைத் துறை இயக்குநர்,
690, அண்ணா சாலை, நந்தனம், சென்னை –35.
நகல்
மாண்புமிகு தொழில்துறை மற்றும் போக்குவரத்துத் துறை
அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தொழில் (அ.ந.மு.2/வ.செ.தி.1)துறை, சென்னை–600 009.
இ.கோப்பு/உதிரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்** 18/9/2015